செ.வெ.எண்: 40 நாள்:21.01.2018

# பத்திரிக்கைச் செய்தி

# திருநெல்வேலி மாவட்டம்

## ஊரக மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கான வார்டு மறுவரையறை குறித்த ஆட்சேபணை / கருத்துக்கள் மீதான மண்டலவாரியான கூட்டத்தில் கலந்து கொண்டு பொது மக்கள் கருத்தினை தெரிவித்தல்

*********

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான வரைவு வார்டு மறுவரையறை 27.12.2017 அன்று வெளியிடப்பட்டது குறித்து 12.01.2018 வரை ஆட்சேபணைகள் மற்றும் கருத்துக்கள் அளித்த பொதுமக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் மண்டல வாரியாக நடவடிக்கை அலுவலர் மற்றும் மேற்பார்வை அலுவலர்கள் தலைமையில் கீழ்க்கண்ட விபரப்படி நடைபெறும் கூட்டத்தில் கலந்து கொண்டு தங்களுடைய மனுக்கள் தொடர்பான கருத்தினை தெரிவிக்கலாம்.

| கூட்டம் நடைபெறும் இடம் | நாள் மற்றும் நேரம் | கலந்து கொள்ளும் ஊராட்சி ஒன்றியம் |
|---|---|---|
| தென்காசி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் | 23.01.2018 மு.ப. 11.00 மணி | கீழப்பாவூர், கடையநல்லூர், தென்காசி, சங்கரன்கோவில், செங்கோட்டை மற்றும் வாசுதேவநல்லூர் |
| பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகம் | 23.01.2018 பி.ப. 4.00 மணி | பாளையங்கோட்டை, மானூர், மேலநீலிதநல்லூர் மற்றும் குருவிகுளம் |
| சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் | 24.01.2018 மு.ப. 11.00 மணி | அம்பாசமுத்திரம், சேரன்மகாதேவி, பாப்பாக்குடி, கடையம் மற்றும் ஆலங்குளம் |
| வள்ளியூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம | 24.01.2018 பி.ப. 3.00 மணி | நாங்குநேரி, களக்காடு, வள்ளியூர் மற்றும் இராதாபுரம். |

என மாவட்ட வார்டு மறுவரையறை அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப, அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி